# 5. அறிவிப்புகள்

## (அ) தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அறிவிப்பு (1) தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு–Senate–அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு 2 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) அவர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிமன்றப் பேரவை உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 9–7–2009 ஆம் நாளன்று மாலை 4–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

முற்பகல் 11–40

வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 10–7–2009 அன்று மாலை 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 10–7–2009 அன்று மாலை 4–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம். வேட்பாளரின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு-Senate-உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## (ஆ) பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை– Senate–உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு இரண்டு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) அவர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம்,

[பேரவைத் தலைவர்] [2009 ஜூலை 8

தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிமன்ற உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 9–7–2009 அன்று, மாலை 4–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 10–7–2009 அன்று மாலை 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள், 10–7–2009 அன்று, மாலை 4–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம். வேட்பாளரின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு–Senate–உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## (இ) தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிதாக அமைக்கப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு–Syndicate– அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள், தங்களின் வேட்பு மனுக்களை 9–7–2009 அன்று, மாலை 4 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 10–7–2009 அன்று மாலை 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு